DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-200/2019

Prosecution witness – PW 4

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பாண்டி | Caste: | |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

(A2, A4 present. A1, A3 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed)

26.02.2026 – 04.35PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் மேலக்கிடாரம் கிராமத்தில் குடியிருந்து உப்பள நிறுவனத்தில் வேலை செய்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். பட்டியல் சாட்சி 4 மலைச்சாமி தெரியும்.

2. கடந்த 05.07.2017ந் தேதி மாலை 05.00 மணிக்கு சத்தியமூர்த்திக்கும் பஞ்சவர்ணத்திற்கும் நடந்த சண்டை சம்மந்தமாக பொன்னுச்சாமிபுரத்திலிலுள்ள மகராஜன் என்பவரது வீட்டின் அருகே காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் போலீசார் அந்த இடத்திற்கு வந்தார்கள். அந்த இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். நானும், மலைச்சாமியும் அங்கு நின்று கொண்டிருந்தோம். அப்போது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டதற்காக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான் . போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

இவ்வழக்கின் புகார்தாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவினர் தான். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையொப்பம் செய்த பேப்பரில் எழுதியிருந்தது. நான் படித்து பார்க்கவில்லை. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும், அ.சா.1 எனது உறவினர்

என்றாலும் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஓம்/-சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி